இறை
2/12/2020

**திண்டிவனம், மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ஆணை பிறப்பிப்பவர்.திருமதி.ச.சாந்திஎம்எஸ்.சி.,எம்.எட்.,**

**மூ.மு.எண்.3145/அ1/2020 நாள்.10.11.2020**

பொருள். பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை – அவலூர்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.மு.சசிகலா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 15.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் –சார்பாக

பார்வை. 1) திண்டிவனம், மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.8009/அ1/2017 நாள்.14.11.2017.
2) விழுப்புரம், மாவட்டமுதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்ஒ.மு.எண்.5525/அ3/2020 நாள்.01.09.2020.

******

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கல்வி மாவட்டம், அவலூர்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.மு.சசிகலாஎன்பார். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணயம் நடத்திய தொகுதி IV தேர்வு 2015-2016 (I Phase) மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அப்போதைய திண்டிவனம் கல்வி மாவட்டம், அவலூர்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 15.11.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். பார்வை-2ல் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ள அறிவுரைகளின் படி அன்னார் பணியேற்ற நாளான 15.11.2017 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றான்று பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தை தகுதிகாண் பருவகாலமாக முடிக்கப்பட வேண்டுமெனவும் தகுதிகாண் பருவ காலத்தில் முடிக்கப்பட வேண்டிய துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னர்தான் இரண்டாவது ஊதிய உயர்வு வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

Scanned by TapScanner

பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுவதுடன் அன்னாரது பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**இணைப்பு. அசல் பணிப்பதவேடு – 1 தொகுதி.**

**மாவட்டக்கல்வி அலுவலர்(பொ)**

**திண்டிவனம்**

பெறுநர்.

திருமதி.மு.சசிகலா

இளநிலை உதவியாளர்

அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, .

அவலூர்பேட்டை. (உரியஅலுவலர் வழியில்)

நகல். மாவட்டக்கல்வி அலுவலர், செஞ்சி.

நகல். தலைமை ஆசிரியர்,அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அவலூர்பேட்டை.

Scanned by TapScanner